

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 OCTOBER

மலர்: 12 இதழ்: 1 அக்டோபர் 2018 விலை: ரூ. 10


## நூற்றாண்டுகளாக மறுக்கப்பட்ட மனித சமத்துவம்

### ஐரோப்பியர் அடிமை வாணிபம்



● மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, இறைவன் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)





நாங்கள் மனிதர்கள் இல்லையா?
உங்கள் சகோதரர்கள் இல்லையா?
மனிதகுலமே பதில் சொல்!

# சக மனிதன் சகோதரனே! சரி சமமே!



உங்கள் வண்ணம் வேறுவேறாயினும்
உங்கள் எண்ணம் வேறுவேறாயினும்
உங்கள் நாடுகள் வேறுவேறாயினும்
உங்கள் மொழிகள் வேறுவேறாயினும்
உருவங்கள் வேறுவேறாயினும்
பருவங்கள் வேறுவேறாயினும்
உங்கள் உருவத்தை மூடி நிற்கும்
தோல் என்ற திரையினை உருவிப்பாரீர்!

உள்ளிருக்கும் உறுப்புகளுக்கு
ஊருமில்லை பேருமில்லை
உறவுமில்லை பகையுமில்லை
பதவியில்லை பட்டமில்லை
உயர்வு கூறி உரிமை கோரி
பெருமையடிக்க முகாந்திரமில்லை..

கண்ட கனவுகள் வேறாகலாம்
உண்ட உணவுகள் வேறாகலாம்
படுத்த படுக்கைகள் வேறாகலாம்
உடுத்தும் உடைகள் வேறாகலாம்
உடையோடு தோலையும் உரித்தெடுத்து
உள்ளிருக்கும் உருவமதை ஒப்பிட்டால்
உடமையும் அடிமையும் ஒன்றல்லவா?

உடலுக்குள் உறுப்பும் உமதல்ல
மெருகூட்டும் அழகும் உமதல்ல
உயிரூட்டும் பொறுப்பும் உமதல்ல
கூடுவிட்டு ஆவி பறந்து போனால் –உம்
உருவமதை வீழாமல் தடுத்திடவோ –உம்
பெருமையதை தாழாமல் தடுத்திடவோ
உறவுகளும் உடமைகளும் வருவதில்லை.

உறவுகள் உமைவிட்டு பிரியும் வேளை
உடலங்கு மண்ணுக்குள் புதையும் வேளை
சடலங்களோடா பேணுவீர் தீண்டாமை?

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 1 அக்டோபர் 2018 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

ஓரிறைக் கொள்கையின்றி ஒருமைப்பாடு சாத்தியமில்லை -3
சமத்துவத்தை மறுத்தவர்கள் நிகழ்த்திய கொடுமைகள் -6
அடிமை வாணிபக் கொடுமைகள் -9
இறைவனின் பெயர் சொல்லி மறுக்கப்பட்ட மனித சமத்துவம் -13
இனப்பெருமை பாராட்டுவோருக்கு இறைவன் விடுக்கும் சவால் -16
சமத்துவத்துக்கு தடை நிற்கும் நாத்திகம் -19
திருடர்கள் காத்திருக்கிறார்கள்! -21

● (நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு சத்தியம் வந்துவிட்டது எனவே யார் (அதைப் பின்பற்றி) நேரான வழியில் செல்கிறாரோ அவர் தம் நன்மைக்காகவே அந்நேர்வழியில் செல்கின்றார் எவர் (அதை ஏற்க மறுத்து) வழி தவறினாரோ, நிச்சயமாக அவர் தமக்குக் கேடான வழியிலே செல்கிறார் நான் (உங்களைக் கட்டாயப்படுத்தி) உங்கள் காரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவனல்லன்." (திருக்குர்ஆன் 10:108)

### வாசகர்கள் கவனத்திற்கு...

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும். ● ஓராண்டு சந்தா **Rs.120-**

● இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:
**House of Peace,**
PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**
www.quranmalar.com www.waytoparadise.in

# மனிதகுல ஒருமைப்பாட்டுக்கு இஸ்லாமே வழி - மேதைகள் கருத்துக்கள்

● "சமத்துவத்தை பாராட்டப்பட வேண்டிய அளவுக்கு சாதித்துக் காட்டிய மதம் இஸ்லாம்தான் இஸ்லாம் மட்டுமே." **சுவாமி விவேகானந்தா.** (Complete Works of Vivekananda Vol.6 Para 415)

● "இறைவனுக்கு முன்பு அனைவரும் சமம் என்ற கருத்தை இஸ்லாத்தைத் தவிர வேறெந்த மதமும் செயல்படுத்திக் காட்டவில்லை." **பி.ராமசாமி அய்யர்** (P.Ramasamy Iyer, Eastern Times, 22nd December 1944)

● "முஸ்லிம்களுக்கிடையே இன பேதங்கள் தலையெடுக்க விடாமல் செய்ததே இஸ்லாத்தின் மகத்தான சாதனையாகும். நவீன உலகில் இன்றும் கூட இந்த இஸ்லாமியப் பண்பு மிக மிக அதிகமாகத் தேவைப்படுகிறது." - **வரலாற்றாசிரியர் ஆர்னால்டு டாயின்பீ** (Arnold Toynbee, Civilization on Trial)

● "இன, சாதி அமைப்பை எந்த முஸ்லிம் நாடும் வளர்க்கவில்லை." - **பிரிட்டிக்ஷ் கலைக்களஞ்சியம்** (Encyclipaedia Brittanica)

● ரோம் சாம்ராஜ்யமாகட்டும், பைஸாந்தியப் பேரரசாகட்டும், பராசீக சாம்ராஜ்யமாகட்டும். இந்தியப் பண்பாடே ஆகட்டும் இவை எல்லாவற்றிலும் சமூகத்தைப் பல்வேறு வகுப்பு களாகவும் சாதிகளாகவும் கூறு போட்டு பகுக்கின்ற அரக்கத்தனமான, கொடூரமான சட்டங்களே கோலோச்சின. இவற்றோடு ஒப்பிடும் போது இஸ்லாம் இவையெல்லா வற்றுக்கும் நேரெதிரே நின்றது. இஸ்லாம் சமத்துவத்தைத் தூக்கிப்பிடித்தது. இஸ்லாம் சகோதரத்துவத்தைக் கொண்டாடியது. அதற்கு நேர்மாறாக தொன்மையான, அதே சமயம் வீழ்ச்சிப் பாதையில் வேகமாக சரிந்து கொண்டிருந்த பண்டைய பண்பாடுகள் செழித்தோங்கியிருந்த நாடுகளில் சமத்துவமும் சகோதரத்துவமும் மறக்கடிக்கப்பட்டு இருந்தன என்பது தான் உண்மை.

- **எம்.என். ராய் (ஹிஸ்டாரிகல் ரோல் ஆ∴ப் இஸ்லாம்)** M.N.Roy, Historical Role of Islam

● எந்த சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை அன்றைக்கே பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக்கொண்டிருந்த மனிதரால் பிரச்சாரம் செய்யப்பட்டது. மேல்நாடுகள் எதையெல்லாம் புதிய கருத்துக்கள் என்றும் மகத்தான சாதனைகள் என்றும் கூறுகின்றனவோ, அவையெல்லாம் அந்த அரேபியாவின் பாலைவனச் சோலையிலே விதைக்கப்பெற்ற வித்துக்களின் விருட்சங்களேயன்றி அவற்றில் புதியது ஒன்றுமில்லை.

- **கவிக்குயில் சரோஜினி நாயுடு**

● பிறப்பால் உயர்வு தாழ்வு போக்கி மனிதன் மனிதனாக வாழ வழி செய்த முஹம்மதைப் புகழ என்னிடம் வார்த்தைகள் கிடையாது.

**- டாக்டர் அம்பேத்கார்**

# ஓரிறைக் கொள்கையின்றி ஒருமைப்பாடு சாத்தியமில்லை

ஒரே மூலத்தில் இருந்து ஒரே விதமான உருவத்தோடு படைக்கப்பட்டுப் பல்கிப் பெருகிய மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் கற்பிக்கப்படுவதற்கு முக்கியமான காரணமாக இருப்பது இறைவனைப் பற்றிய தவறான புரிதல்களே. படைத்த இறைவன் ஒருவனுக்கே தெய்வீகத் தன்மை உள்ளது என்பதை மக்கள் ஏற்காதவரை மனித சமத்துவமும் சகோதரத்துவமும் சாத்தியமில்லை என்பதை ஆராய்வோர் அறிய முடியும்.

வரலாற்றை ஆராயும்போது கீழ்கண்டவை நமக்கு புலனாகும்:

● மக்களின் அறியாமையை பயன்படுத்தி சில ஆட்சியாளர்கள் தங்களை தாங்களே கடவுளாக அறிவித்துக்கொண்டார்கள். இடைத்தரகர்களை ஏவிவிட்டு குடிமக்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும் அதை உறையச் செய்தார்கள். இதன் விளைவாக அந்த மக்கள் தங்கள் ஆட்சியாளர்களை கடவுளர்களாகப் பார்த்தனர். அவர்களுக்கு வணக்கமும் செலுத்தினார்கள்.

● இன்னும் சிலர் தாங்களே கடவுளுக்கு நெருக்கமான இனம் என்றும் தாங்கள் மூலமே இறைவனை அணுக முடியும் என்றும் கூறி தங்களை சாதாரண மக்களை விட மேன்மையானவர்கள் என்று நம்ப வைத்தார்கள். ஆள்வோரையும் குடிமக்களையும் தங்களுக்குப் பணிய வைத்தார்கள்.

### இஸ்லாம் வழங்கும் தீர்வுகள்

முதலில் மனிதன் மனிதனைக் கடவுளாக்கும் மடமையை இஸ்லாம் குறுக்கிட்டு மக்களைத் திருத்துகிறது. இறைவனைப் பற்றிய தவறான புரிதலைக் களைகிறது.

● **சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன். அவன் யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

அதாவது ஏகனாகிய இறைவன் தனித்தவன், தேவைகள் ஏதும் இல்லாதவன். ஒப்பில்லாதவன். அவனது படைப்பினங்களைப் போல் மற்றவர்களை சார்ந்து இராதவன். தாய் தந்தை, மனைவி, மக்கள் என எந்த உறவுகளும் இல்லாதவன். தன்னிகரற்றவன். இவையே நாம் வணங்குவதற்குத் தகுதி வாய்ந்த இறைவனின் உண்மை இலக்கணங்கள் என்பதை மனித மனங்களில் விதைக்கிறது.

அதே போல படைத்தவனைத்தவிர மற்றவை அனைத்தும் படைப்பினங்களே. எனவே அந்த இறைவனுக்கு பதிலாக படைப்பினங்களை வணங்குவதோ அல்லது கடவுள் என்று கற்பிப்பதோ மோசடியும் பாவமும் ஆகும் என்கிறது இஸ்லாம். திருக்குர்ஆன் எச்சரிக்கிறது:

● **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை (திருக்குர்ஆன் 5:72)**

(அல்லாஹ் என்றால் "வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்" என்று பொருள்)

## இடைத்தரகர் தேவை இல்லை

அடுத்ததாக இறைவனுக்கு இடைத்தரகர்கள் தேவை இல்லை என்பதையும் தெளிவாகக் கூறுகிறது இஸ்லாம்.

- **(நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)**

இடைத்தரகர்களுக்கு இடம்கொடாமல் படைத்த இறைவனை நேரடியாக வணங்கும்போது இனம், நிறம், இடம், மொழி இவற்றால் பிரிந்து கிடக்கும் மனிதர்களுக்கு இடையே பிணைப்பும் ஒருமைப்பாடும் சமத்துவமும் சகோதரத்துவமும் இயற்கையாகவே வளர ஆரம்பிக்கும்.

## இனமேன்மை பாராட்டுவோருக்கு மறுப்பு

தொடர்ந்து பிறப்பினால் மேன்மை பாராட்டுவோரின் வாதத்தையும் தவிடுபொடியாக்கி விடுகிறது இஸ்லாம்:

- **மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)**

இறைவனுக்கு தன் செயல்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும் என்ற பொறுப்புணர்வே இறையச்சம் என்று அறியப்படுகிறது. அதாவது அனைவரின் மூலமும் ஒன்றே என்பதையும் இறையச்சம் யாருக்கு அதிகமாக இருக்கிறதோ அவரே இறைவனுக்கு நெருங்கியவர் என்று இறைவன் தெளிவுறக் கூறுகிறான்.

## அத்துமீறல்களுக்கு தண்டனை

தொடர்ந்து தெளிவான மறுமைக் கோட்பாட்டைக் கற்பித்து நம் வினைகளுக்கு விசாரணை உண்டு என்ற உண்மையையும் கற்பித்து சக மனிதர்களின் உரிமைகளை ஏன் பேணவேண்டும் என்பதற்கான காரணத்தையும் கற்பிக்கிறது.

- **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்.இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

அதாவது, இவ்வுலகில் நாம் செய்யும் பாவங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் தண்டனையாக நரகமும் புண்ணியங்களுக்கும்

தியாகங்களுக்கும் பரிசாக சொர்க்கமும் கிடைக்கும்.

**ஓரிறைக் கொள்கையால் நடைமுறைக்கு வரும் ஒருமைப்பாடு**

மேற்கூறப்பட்டவாறு படைத்தவனான ஏக இறைவனை விட்டு படைப்பினங்களை வணங்கத் தலைப்படும் போது மனித குலமும் அவரவர்களின் கடவுள் கொள்கையைப் பொறுத்து கூறுபோடப் படுகிறது. இந்தக் கொடுமைக்கு பலியான நாடுகள் பல. அவற்றில் சிறந்த உதாரணம் நமது நாடுதான். நமது நாட்டின் ஜாதி அமைப்புக்களைப் பாருங்கள். எந்த ஜாதியைச் சேர்ந்தோரானாலும் நாம் அனைவரும் மனிதர்களே. ஒரே இரத்தம், ஒரே மாமிசம் ஒரே உடலமைப்பு என எல்லாம் ஒன்றாக இருந்தும் ஒரு ஜாதி மக்கள் இன்னொரு ஜாதி மக்களோடு கலப்பதில்லை. இதில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதவர்கள் என பல கூறுகள்!

என்ன காரணம்? ஒவ்வொரு ஜாதியும் தங்களுக்கு வெவ்வேறு தெய்வங்கள் இருக்கின்றன என்று நம்புகிறார்கள். அவற்றை குலதெய்வம் என்று சிறப்பு செய்கிறார்கள். இவை மட்டுமல்ல, ஊர்களையும் எல்லைகளையும் பிரிக்கும் காவல் தெய்வங்களும் எல்லைச்சாமிகளும் மனிதர்களுக்கிடையே மேலும் பிளவை வலுப்படுத்துகின்றன. இஸ்லாம் என்ன சொல்கிறது என்றால், இந்த கற்பனை தெய்வங்களை எல்லாம் விலக்கி வைத்து அனைவரும் உங்களைப் படைத்து பரிபாலித்து வரும் அந்த ஒரே இறைவன் பக்கம் மீளுங்கள் என்கிறது.

இன்று இந்தியாவில் வாழும் முஸ்லிம்களை எடுத்துக் கொள்ளுங்கள், இவர்கள் யாருமே அரபு நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களோ நபிகள் நாயகத்தின் வாரிசுகளோ அல்ல. இவர்கள் இதற்கு முன் இந்துக்களாகவோ கிறிஸ்துவர்களாகவோ இருந்து மதம் மாறியவர்களின் தலைமுறையினர்தான். இவர்கள் இந்த ஏக இறைகொள்கையை ஏற்றுக் கொண்டபின் என்னென்ன புரட்சிகள் நடந்துள்ளது பாருங்கள். இன்று இவர்களுக்கு ஜாதிகள் இல்லை. இவர்களிடையே தீண்டாமை இல்லை. ஒரு காலத்தில் தீண்டாமையால் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்று சிதறுண்டு கிடந்த இம்மக்களை இன்று பள்ளிவாசல்களில் தொழுகைக்காக ஒரே அணியில் தோளோடு தோள் நிற்க வைப்பதும் ஒரே தட்டில் பாகுபாடின்றி உண்ண வைப்பதும் இந்த ஓரிறைக்கொள்கை நிகழ்த்தி வரும் அற்புதங்களே!



# சமத்துவத்தை மறுத்தவர்கள் நிகழ்த்திய கொடுமைகள்

மனிதகுல விரோதியான ஷைத்தானின் தாக்கத்தால் சக மனிதன் தனக்கு சகோதரனே மற்றும் சமமானவனே என்ற உண்மையை மக்கள் மறந்தார்கள். சகோதரன் என்பதை ஏற்றுக்கொண்டால் சமமானவன் என்பதை மறுக்கமுடியாதல்லவா? யார் மறுத்தாலும் மறைத்தாலும் உண்மை உண்மையே. அதை தன் இறுதிவேதம் மூலமாக மீண்டும் நினைவூட்டுகிறான்:

- **மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)**

மக்களைச் சுரண்டப் புறப்பட்ட ஆதிக்க சக்திகளும் இடைத்தரகர்களும் இனம், நிறம், மொழி போன்றவற்றைக் காரணம் காட்டி அவர்களுக்குள் ஏற்ற தாழ்வுகளும் தீண்டாமையும் கற்பித்தார்கள். சிலர் தங்களையே கடவுள் என்று கூறிக்கொண்டார்கள். சிலர் தங்கள் இனமே உயர்ந்தது, தங்கள் இனத்தவர்களே கடவுளுக்கு மிக நெருங்கியவர்கள் என்றார்கள். சிலர் தங்கள் நிறத்தை, மொழியைக் காரணம் காட்டினார்கள். இவ்வாறு தன் சகோதர மனிதர்களை சுரண்டினார்கள், அடக்குமுறைகள் கையாண்டு கொடுமைப் படுத்தினார்கள். சுயநலத்துக்காக சக மனிதர்களின் உரிமைகளை மறுத்தார்கள். ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கவும் செய்தார்கள்.

சரித்திரம் முழுக்க அதுபோன்ற பற்பல நிகழ்வுகளால் நிறைந்திருந்தாலும் ஒருசில உதாரணங்களை மட்டும் சுருக்கமாக இங்கு காண்போம்.

## ஏன் இவற்றை நினைவு கூருகிறோம்?

இன்று உலகெங்கும் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கு மக்கள் இஸ்லாம் எனும் வாழ்வியல் கொள்கையை ஏற்று வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களும் இவர்களுக்குப் பிறக்கும் தலைமுறையினரும் மிக எளிதாக மனித சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் எனும் மாபெரும் அருட்கொடைகளை அனுபவித்துக்கொண்டு வாழ்கின்றனர். அந்த அருட்கொடைகள் மறுக்கப்பட்டதனால் அல்லது மறைக்கப்பட்டதனால் பிற மக்கள் அனுபவித்த கொடுமைகளை நினைவு கூரும்போதுதான் அவற்றின் அருமை பெருமைகளை நாம் உணர முடியும்.இன்னும் சகமனிதர்கள் சகோதரர்களே என்ற அடிப்படையில் அநீதி இழைத்தோருக்கு இறைவனிடம் விசாரணை காத்திருக்கிறது என்பதை எச்சரிப்பதும் நம் கடமையாக இருக்கிறது.

## காலனி ஆதிக்க சக்திகள் இழைத்த கொடுமைகள்:

மனித சரித்திரத்தில் சக மனிதன் தன் சகோதரனுக்கு இழைத்த



கொடுமைகளில் மிகவும் ஈவிரக்கமில்லாதவை ஐரோப்பிய நாடுகள் நிகழ்த்திய காலனி ஆதிக்கத்தின்போது நிகழ்ந்துள்ளன. ஆயுத மேன்மை அடைந்தபோது அவர்களின் எண்ணமெல்லாம் எவ்வாறு இருந்தது தெரியுமா? 'நாம் புதுப்புது நாடுகளை கைப்பற்றி நம் காலனிகளாக மாற்றவேண்டும் அங்குள்ள இயற்கை வளங்களைக் கைப்பற்ற வேண்டும், அவ்வளங்களை செப்பனிட்டு விற்று காசாக்கவேண்டும். நம் தொழிற்சாலைகளில் உருவாகும் அளவுக்கதிகமான பொருட்களை நம் காலனிகளில் விற்க வேண்டும். கழிவுகளை கொட்டும் இடமாகவும் அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும்' என்பதாக இருந்தது. தீவிரமாக கடல்மார்க்கமாக வெவ்வேறு கண்டங்களுக்கும் நாடுகளுக்கும் தீவுகளுக்கும் பாதைகள் கண்டறிந்தார்கள். ஆயுத முனையில் அவ்விடங்களில் இயல்பு வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருந்த அப்பாவி மனிதர்களை துப்பாக்கி முனையில் அடிமைகளாக்கினார்கள். அடங்க மறுத்தோரை கொன்று குவித்தார்கள். நூற்றாண்டுகளாக இவர்கள் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களும் கொடுமைகளும் ஏராளம், ஏராளம். ஆயினும் எடுத்துக்காட்டாக சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

### அமேரிக்க குடியேற்றம்

அமெரிக்கக் கண்டங்களுக்கு கடல்வழி மார்க்கம் கண்டுபிடித்த கொலம்பஸ் குழுவினரும் அவரைப் பின்தொடர்ந்தவர்களும் அங்கிருந்த பூர்வகுடிகளான செவ்விந்தியர்களை அடக்குமுறைகளைக் கையாண்டு அடிமைப்படுத்தினார்கள். அவர்களை அடிமைகளாகப் பிடித்து ஸ்பெயினுக்கு ஏற்றுமதி செய்தனர். அவர்களது தங்க வயல்களைக் கபளீகரம் செய்தனர்.

கொலம்பசும் அவருக்குப் பின் அது போன்று வந்தவர்களும் வெறும் 2 ஆண்டுகளில் மட்டும் தூக்கிலிட்ட, கொலை செய்த, எரித்த, சிதைத்த,

தற்கொலைக்குத் தள்ளிய செவ்விந்தியர்களின் எண்ணிக்கை சுமார் *2,50,000* என்று கணக்கிடப்படுகிறது. இத்தகைய ஆக்கிரமிப்புகள், அமெரிக்கக் கண்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்றன. அமெரிக்க கண்டத்தின் பல பகுதிகளில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த மக்களை இனப் படுகொலை செய்து ஐரோப்பாவின் பல பகுதி களிலிருந்து வெள்ளை இனத்தவர்கள் குடியேற்றப் பட்டனர்.



அட்லாண்டிக் சமுத்தி ரத்தின் கடலோரம் துவங்கி, பசிபிக் சமுத்திரக் கரை வரை, அத்தனை பூர்வ குடியினரையும் அழித்தொ ழித்து, அமெரிக்க சாம் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு சுமார் *300* ஆண்டுகள் பிடித்தன. இந்த *300* ஆண்டுகளும் உலகமே அதிர்ந்து போகிற அளவுக்கான கொடுமைகள் மனித குலத்தின் மீது தொடுக்கப்பட்டன.

தங்களின் கட்டுமானப்பணிகளுக்காக ஏற்கனவே அடிமைப்படுத்தி வைத்திருந்த தென்னாப்பிரிக்காவின் கருப்பு இனத்தவரை இறக்குமதி செய்து ஆடு மாடுகளை விற்பதை போல விற்றார்கள். இந்த ‘வெள்ளை தேசத்தின்’ விரிவாக்கத்திற்காக உள்ளூர் மக்கள் மீது படுகொலைகள், உயிருடன் எரிப்பு, ஏமாற்று வேலை,மோசடி, பெண்கள் மீது சொல்ல முடியாத பாலியல் வன்கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ஆனால் ஒவ்வொரு மனித உரிமை மீறல்களும் முழுமையாக விசாரிப்புக்கு உள்ளாக இருக்கின்றன. ஆம், மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான முறையில் நீதி வழங்குவான் இறைவன்:

- **மறுமை நாளுக்காக நீதியான தராசுகளை நிறுவுவோம். எவருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கப்படாது. ஒரு கடுகு விதை அளவே இருந்த போதும் அதையும் நாம் கொண்டுவருவோம். கணக்கெடுக்க நாமே போதும். (திருக்குர்ஆன் 21:47)**

- “நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் உரிமைகளை உரியவர்களிடம் நிச்சயமாக நீங்கள் ஒப்படைப்பீர்கள். எந்தளவுக் கென்றால், கொம்பில்லாத ஆட்டுக்காக (அதை முட்டிய) கொம்புள்ள ஆட்டிடம் பழிவாங்கப்படும்”

(அறிவிப்பாளர் அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்).

**சமத்துவத்தை மறுத்தவர்கள் நிகழ்த்திய கொடுமைகள்**

# அடிமை வாணிபக் கொடுமைகள்

இந்தியாவை காலனிப்படுத்தி ஆண்டுகொண்டிருந்தது ஆங்கிலேயர்கள் அல்லது வெள்ளையர்கள் என்றுதான் நாம் சரித்திரப் பாடங்களில் படித்தோம். ஆனால் ஒரு தனியார் வியாபாரக் குழுமம்தான் அப்போதைய ஆங்கிலேய அரசின் ஆதரவோடு அதை நிகழ்த்திக் கொண்டு இருந்தது என்பதை நம்மில் பெரும்பாலோர் அறியமாட்டோம். கிழக்கிந்திய கம்பெனி (East India Company) ரோத்சைல்ட் (Rothchild) என்ற யூத குடும்பத்தின் உடமையாக இருந்தது. *1760* களில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் இயங்கி வந்த பன்னாட்டு வங்கிக் குழுமங்களின் சொந்தக்காரர்களாக விளங்கியது இந்த ரோத்சைல்ட் குடும்பம். பல நாடுகளிலும் நடந்த காலனி ஆதிக்க கொடுமைகளுக்கு தலைமை வகித்தது இந்த யூதக் குடும்பமே.

ஆயுத மேன்மை பெற்று ஆதிக்கம் பெற்ற ஐரோப்பிய காலனி ஆதிக்க சக்திகள் கடல்வழி மார்க்கமாக ஏனைய கண்டங்களுக்கும் நாடுகளுக்கும் வழிகளைக் கண்டுபிடித்தார்கள். கண்டுபிடித்தவர்களை சரித்திர சாதனைகள் புரிந்தவர்களாக வரலாறுகளில் பதிந்தார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் சாதனைகள் புரிவதற்காக அல்ல. மாறாக உலக நாடுகளின் நிலத்தடி வளங்கள், தங்கம், இயற்கை வளங்கள் இவற்றைத் தேடிப் பிடித்து கொள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட பயணங்களே அவை. ஆனால் சரித்திரப் பாடங்களை திரித்து எழுதினார்கள். உண்மைகளை மறைத்து தங்களை நாகரீகம் வாய்ந்தவர்களாகவும் சமாதானப் பிரியர்களாகவும் காட்டிக்கொண்டார்கள். உலகமும் நம்பியது. இன்னும் நம்பிக்கொண்டு இருக்கிறது.

## மாபெரும் நிலப்பரப்பு கைவசம்

அவ்வாறு மேற்கொண்ட முயற்சியில் ஆப்பிரிக்கா கண்டம் என்ற






## பிடிபட்ட அடிமைகளை துறைமுகம் நோக்கி நடக்க வைத்தல்

மாபெரும் நிலப்பரப்பு அவர்களின் கைவசம் வந்தபோது அங்கே இயற்கை வளங்கள் மட்டுமல்ல மாபெரும் பலம் வாய்ந்த மனித வளமும் காத்திருந்தது அங்கே. பிறகு என்ன? தங்கள் இனமே அனைத்து இனங்களையும் விட மேலானது என்ற மனப்பான்மையும் செல்வத்தை எப்படியாவது சம்பாதித்துக் குவிக்க வேண்டும் என்ற தீராத வெறியும் கொண்டு அலைந்தவர்களிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியுமா? தாங்கள் எது செய்தாலும் தட்டிக்கேட்க இவ்வுலகில் யாருமேயில்லை என்ற நிலையை அடைந்த அந்த கொடியவர்கள் அந்நாட்டு அப்பாவி மக்கள் மீது அராஜகங்களை தொடுத்தார்கள். மானிட சரித்திரத்திலேயே அதுபோன்ற ஒரு ஈவிரக்கமற்ற செயலை யாருமே செய்திருக்க முடியாது. ஆம் சற்று படித்துப்பாருங்கள்.


### அப்பாவிக் கறுப்பின மக்கள்

ஆப்பிரிக்க நாடுகளில் அவர்களுக்கே உரிய கலாச்சாரத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த இலட்சக்கணக்கான கறுப்பின அப்பாவி மக்களை துப்பாக்கி முனையில் பிடித்தார்கள் காலனி ஆதிக்க கொடூரர்கள். அவ்வாறு பிடித்த அடிமைகளை கப்பல்களில் ஏற்றி ஐரோப்பாவுக்கும் அமெரிக்கா கண்டத்தின் பகுதிகளுக்கும் கொண்டு சென்று விற்க முனைந்தார்கள். ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என யாரையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. தங்களைப் போலவே அவர்களும் மனித உணர்வுகளும் சிந்தனையும் கலாச்சாரமும் குடும்ப அமைப்புகளும் வாழ்க்கை முறைகளும் கொண்டவர்கள் என்ற உணர்வு அவர்களுக்கு

## அடிமைகளால் நிரப்பப்பட்ட கப்பல் – இது மேல்தளம்



சற்றும் எழவில்லை. எதையுமே அவர்கள் மதிக்கவில்லை. ஆடுமாடுகளை விடக் கேவல மான முறையில் அள்ளிக் கொண்டு சென்றார்கள். பிடித்த இடங்களில் இருந்து கடற் கரைக்கு நூற்றுக் கணக்கான மைல்கள் நடக்க வைத்தே கொண்டு சென்றார்கள். ஓடிப் போகாமல் இருக்க ஒருவரை யொருவர் சங்கிலி போல பிணைத்தார்கள். கர்ப்பிணி களையும் நோயாளிகளையும் அவர்கள் விட்டு வைக்க வில்லை.



## தற்கொலைக்கும் வழியில்லை

படு மோசமான நிலைகளில் கப்பல்களில் ஏற்றி அட்லாண்டிக் கடல் மார்க்கமாக கடத்தினார்கள். கப்பலின் மேல்தளத்திலும் கீழ்தளத்திலும் கொள்ளளவு நிறையும் அளவுக்கு அதிகமானோரை நிரப்பினார்கள். அவர்களை தேக்கரண்டிகளை வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குவது போல அடுக்கினார்கள். கொடுமைகளை சகிக்க முடியாத பலர் கடலில் குதித்து தற்கொலையில் தஞ்சம் புகுந்தார்கள். அதைத் தடுப்பதற்கு இவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவைகளின் கை கால்களில் விலங்கிட்டு ஒருவரோடு ஒருவர் சங்கிலிகளால் பிணைத்தார்கள்.

அவ்வப்போது அற்ப உணவை அவர்களுக்கு ஊட்டினார்கள். இரக்க உணர்வினால் அல்ல. தங்களின் “வியாபார சரக்கு’ கெட்டுப்போகாமல் இருப்பதற்காக. ஆம், அதே நிலையில் அவர்கள் உண்டார்கள், மலஜலம் கழித்தார்கள், சுமார் நான்கு மாதங்கள் நீண்ட கடற்பயணத்தை அந்த அப்பாவி அடிமை மக்கள் எவ்வாறு கழித்திருப்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்துபாருங்கள். கடற்பயணத்தில் அவர்கள் எடுத்த வாந்தியிலும் மலஜலங்களிலும் மாதவிடாய் இரத்தத்திலும் கிடந்து புரண்டார்கள். கர்ப்பிணிகள் தங்கள் குழந்தைகளை அந்தக் கழிவுகளுக்கிடையேயே பெற்றெடுத்தார்கள். குழந்தைகளின் எதிர்காலத்தை பயந்து தங்கள் குழந்தைகளை வாய்ப்பு கிடைத்தபோது கடலில் வீசி எறிந்தார்கள் அந்தத் தாய்மார்கள்!

## பிணங்களோடு பிணைக்கப்பட்ட நிலையில்!

கப்பலின் அடித்தளத்தில்தான் இவர்கள் அடுக்கப்பட்டு இருந்தனர். அங்கு காற்றோட்டம் கிடையாது. வெப்பமும் கழிவுகளின் நாற்றமும் அவர்களை வாட்டி எடுக்கும். மட்டுமல்ல பிணங்களின் நாற்றமும் கூட்டு சேர்ந்து கொள்ளும் அங்கு! ஆம் தங்களோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டவர்கள் இறந்து போனால் அவர்களை உடனுக்குடன் அகற்றிவிடுவார்களா என்ன?

கடற்பயணத்தின் போது நோய் பரவினால் நோயாளிகளை மற்றவர்களிடம் இருந்து பிரித்து அவர்களை கடலில் வீசி எறிந்தார்கள். மற்றவர்களுக்கு நோய் பரவாமல் இருப்பதற்காக!

தங்களின் "சரக்குகள்" கெட்டுப்போகாமல் இருக்க கீழ்த்தள மக்கள் மேல்தளத்திற்கும் மேல் தளத்தோரை கீழ்த்தளத்திற்கும் அவ்வப்போது மாற்றுவார்கள். கட்டாய உடற்பயிற்சியும் செய்விக்கப்பட்டார்கள். பயண இலக்கு வந்தடையும் முன்பு சில நாட்கள் அவர்களுக்கு அதிக உணவளித்து கொழுக்க வைப்பார்கள். காரணத்தை நீங்களே ஊகிக்க முடியும். ஆம், கடற்கரையில் கூடும் அடிமை சந்தையில் தங்களின் சரக்கு அதிக விலைக்கு விற்க வேண்டுமல்லவா?

**'சரக்குகளுக்கு' காப்பீடு**

யூத அடிமை வியாபாரிகள் பயணத்தில் இழந்த சரக்குகளுக்கு காப்பீடும் (insurance) வசூலித்தார்கள்.

தப்ப முயற்சிக்கும் அடிமைகளின் கால்களை வெட்டினார்கள், மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் பொருட்டு.

இவ்வாறு கரையில் விற்கப்பட்ட அடிமைகள் நாளொன்றுக்கு 19 மணி நேரம் மனிதாபிமானமற்ற நிலைகளில் கடுமையான உழைப்பு செய்ய பணிக்கப்பட்டார்கள். மிகக் குறைவாகவே அவர்கள் உணவளிக்கப்பட்டார்கள்.

90 இலட்சத்தில் இருந்து ஒரு கோடியே பத்து இலட்சம் வரை மக்கள் ஆப்ரிக்காவில் இருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தின் மறுகரைகளுக்கு உயிருடன் கடத்தப்பட்டனர் என்று சரித்திர ஆய்வாளர்கள் பதிவு செய்கிறார்கள். ஆப்பிரிக்காவில் அடிமைகளாக பிடிக்கப்படும்போது தப்பித்தல், காடுகளைக் கடந்து கரைகளை நோக்கிய நடைபயணத்தில் இறப்பு, கப்பலுக்காக காத்திருக்கும்போது கடற்கரையில் அடிமைக் கொத்தளங்களில் இறப்பு, கடற்ப்பயணத்தின்போது இறப்பு ஆகியவற்றில் குறைந்த பட்சம் இரண்டு கோடி மக்கள் இறந்திருக்கிறார்கள் என்றும் கணிக்கப்படுகிறது.




**வீசியெறியப்படும் அடிமையின் குழந்தை**

# இறைவனின் பெயர் சொல்லி மறுக்கப்பட்ட மனித சமத்துவம்

**● மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

இறைவேதம் திருக்குர்ஆன் அனைத்து மனிதகுலமும் ஒரே ஒரு ஆன்மாவில் இருந்து தோன்றியதே என்பதை மிகத்தெளிவாக அறிவித்து உலகளாவிய சகோதரத்துவத்தையும் மனித சமத்துவத்தையும் வலியுறுத்துகிறது. அத்துடன் நில்லாமல் வலுக்கட்டாயமாக இஸ்லாத்தை ஏற்றோரிடையே நடைமுறைப்படுத்திக் காட்டுவதை உலகம் அறியும்.

உலகெங்கும் பள்ளிவாசல்களில் இஸ்லாமியர் அன்றாடம் ஐவேளை தோளோடு தோள் சேர்ந்து நின்று நிறைவேற்றும் தொழுகைகளில் இதைக் காணலாம். இஸ்லாம் என்ற வாழ்வியலை ஏற்ற மக்கள் இனம் நிறம் மொழி நாடு போன்ற வேற்றுமைகளைக் கடந்து உருவாகும் உலகளாவிய சகோதரத்துவமும் இதற்கு சான்று.

சக மனிதன் சகோதரனே தனக்கு சமமே என்ற திருக்குர்ஆன் கூறும் மேற்கண்ட உண்மையை முந்தைய இறை வேதங்களும் இறைத் தூதர்களும் எடுத்துரைத்தும் கடவுளின் பெயரால் பிற மக்களை சுரண்ட முற்பட்ட ஆதிக்க சக்திகள் அதை மறுக்கவும் மறைக்கவும் செய்தார்கள். ஆத்திகத்தையும் நாத்திகத்தையும் இதற்கு துணைக்கு அழைத்துக்கொண்டன அவை.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது நாமறிந்த தொன்மையான முழக்கம். அனைத்து மனித குலமும் ஆதம் என்ற முதல் மனிதர் மற்றும் அவரது துணைவி ஏவாள் (ஹவ்வா) இவர்களின் பின்தோன்றல்களே என்பது அனைத்து ஆப்ரஹாமிய (யூத, கிருஸ்தவ, இஸ்லாமிய) மதங்களும் கூறும் பொதுவான கருத்து. ஆனால் இறைத்தூதர்களின் மறைவுக்குப் பின்னால் சில இடைத்தரகர்கள் தங்கள் மனம்போன போக்கில் இறைவேதங்களில் அடங்கியிருந்த உண்மைகளை மறைக்கவும் திரிக்கவும் செய்தார்கள். மனிதன் சக மனிதனுக்கு சமமே மற்றும் சகோதரனே என்ற கருத்தை வன்மையாக மறுத்தார்கள். சுயநல ஆதிக்க சக்திகளுக்கு துணை போனார்கள்.

### மரத்துப்போன மனிதாபிமானம்

அதனால் உலகெங்கும் நலிந்த நாடுகளை தங்கள் ஆயுத பலத்தால் கீழடக்கி அந்நாட்டு வளங்களைக் கொள்ளையடித்த காலனி ஆதிக்க சக்திகளுக்கு குற்ற உணர்வே சற்றும் எழுந்ததில்லை. ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற கண்டங்களில் வசித்த



**நாங்கள் மனிதர்கள் இல்லையா?**
**உங்கள் சகோதரர்கள் இல்லையா?**

பழங்குடியினரும் அப்பாவிகளும் சக மனிதர்களே - தங்களைப் போன்ற உணர்வுகள் கொண்டவர்களே- என்ற சகதாபம் அவர்களுக்கு சற்றும் எழவில்லை. எனவே நிராயுதபாணிகளாக நின்ற அவர்களை இலட்சக்கணக்கில் ஈவிரக்கமின்றி கொன்று குவித்தார்கள். ஆப்பிரிக்காவின் அப்பாவிக் கறுப்பின மக்களை அடிமைகளாகப் பிடித்து தங்கள் காலனி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்றார்கள். இலாபம் ஈட்டினார்கள்.

நூற்றாண்டுகளாகத் தாங்கள் செய்து வந்த மனித உரிமை மீறல்களுக்கும் கொடுமைகளுக்கும் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வோ பாவங்களுக்கு இறைவனிடம் கடுமையான தண்டனைகள் உள்ளன என்ற அச்சமோ அவர்களுக்கு துளியும் இருக்கவில்லை. இதற்கு என்ன காரணமாக இருக்ககூடும்?

## இறைவேதங்களில் இனவெறி

காலனி ஆதிக்க கொடுமைகளுக்கு தலைமை வகித்தவர்கள் யூதர்கள். இந்தியாவை காலனிப்படுத்தி ஆண்டுகொண்டிருந்தது ஆங்கிலேயர்கள் அல்லது வெள்ளையர்கள் என்று பொதுவாக அறியப்பட்டாலும் ஒரு தனியார் வியாபாரக் குழுமம்தான் அப்போதைய ஆங்கிலேய அரசின் ஆதரவோடு அதை நிகழ்த்திக் கொண்டு இருந்தது. நமக்குத் தெரிந்த கிழக்கிந்திய கம்பெனி (East India Company) ரோத்சைல்ட் (Rothchild) என்ற யூத குடும்பத்தின் உடமையாக இருந்தது. *1760* களில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் இயங்கி வந்த பன்னாட்டு வங்கிக் குழுமங்களின் சொந்தக்காரர்களாக விளங்கியது இந்த ரோத்சைல்ட் குடும்பம்.

யூத இனம் என்பது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்பது இவர்களின் வலுவான நம்பிக்கை. இவர்களைப் பொறுத்தவரையில் யூத இனம் இறைவனுக்கு மிக நெருங்கிய - கண்ணியம் வாய்ந்த - இனம். வானவர்கள் யாருக்கும் கூட கிட்டாத உயர்ந்த நிலையில் இருப்பவர்கள். தங்கள் இனத்தைத் தவிர மற்றவை அனைத்தும் தாழ்ந்தவையே, அவை தங்களுக்கு அடிமைப்பட்டுத்தான் அல்லது தங்கள் தயவில்தான் வாழவேண்டும், யூதரல்லாத அனைத்து மக்களும் இவர்களுக்கு பணிந்து சேவை செய்யக் கடமைப்பட்டவர்கள் என்பன போன்ற கருத்து இவர்களால் புனிதமாகப் போற்றப்படும் வேதங்களில் திணிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

யூத வேதஞ்சார்ந்த சட்ட நூலான தல்முத் (Talmud) மிக மிகப் புனித சாசனமாகக் யூதர்களால் கருதப்படுகிறது. வேத நூலான பழைய ஏற்பாட்டை (Old Testament) விட மிக மேலாக மதிக்கப்படுகிறது. இதன் மூலம் ஹீப்ரு மொழியில் உள்ளது. யூதர்கள் யூதரல்லாதவர்களோடு எவ்வளவு கடுமையான போக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதை இவர்களின் புனித சாசனம் கற்றுக்கொடுக்கிறது. உதாரணமாக சிலவற்றை கீழே காணலாம். யூதரல்லாத மக்களை அதாவது புறஜாதியினரை (gentiles) ‘கோயிம்’ என்ற இழிசொல் கொண்டே இவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

“All children of the ‘goyim’ (Gentiles) are animals.” (Yebamoth 98a)

- புற ஜாதியினரின் மக்கள் அனைவரும் விலங்குகளே (Yebamoth 98a)
- ஒரு புறஇனத்தான் யூதனைத் தாக்கினால் அவனுக்கு மரணமே தண்டனை. ஒரு யூதனை தாக்குவது என்பது கடவுளின் பார்வையில் கடவுளை தாக்குவது போன்றதாகும். (Sanhedrin 58b).
- புறஇனத்தினர் அனுபவிக்கும் அனைத்து அருட்கொடைகளுக்கும் இஸ்ரேலுக்கு இறைவன் வழங்கிய தனி சிறப்பே காரணமாகும். (Yebamoth 63a).
- ஒரு யூதன் புறஇனத்தான் செய்யும் வேலைக்குக் கூலி கொடுக்க வேண்டியதில்லை. (Sanhedrin 57a)
- புறஇனத்தான் ஒருநாள் முழுக்க ஓய்வெடுத்தால் அவன் கொல்லப்படவேண்டும். (Sandendrin 58b).
- புற இனத்தானை உபசரிப்பது கடவுளை அதிருப்திப் படுத்தும் செயலாகும் (Sanhendrin 104a).
- புறஇனத்தானுக்கு சட்டம் கற்பிப்பது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். (Hagigah 13a).
- சட்டம் கற்கும் புறஇனத்தான் கொல்லப்பட வேண்டியவன். (BT Sanhedrin 59a).
- **இந்த அக்கிரமக்காரர்களின் செயல்களை இறைவன் கவனிக்காமல் இருக்கின்றான் என்று (நபியே!) நீர் கருத வேண்டாம்! அவர்களை அவன் விட்டுவைத்திருப்பது ஒரு குறிப்பிட்ட நாள் வரைக்கும்தான்! அந்நாளில் அவர்களின் விழிகள் மருளும் ( திருக்குர்ஆன் 14:42)**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**
**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

# இனப்பெருமை பாராட்டுவோருக்கு இறைவன் விடுக்கும் சவால்

### இஸ்லாம் வருவதற்கு முன் மதீனாவில் யூதர்கள்

இறைதூதர் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றி வந்தவர்கள் யூதர்கள். நபிகள் நாயகம் இறைவனின் தூதராக ஆவதற்கு முன்னால், அவர்கள் மதீனாவில் வாழ்ந்து கொண்டு இருந்தனர். மதீனாவில் இவர்கள் குடியேறுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அதாவது முஹம்மது நபி அவர்களின் வருகை குறித்து அவர்களின் வேதங்களில் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு இருந்ததால் நபியவர்களின் வருகையை எதிர்பார்த்தே அவர்கள் மதீனாவுக்கு புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டு இருந்தனர்.

ஆனால் மூஸா நபி அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களுக்குள் பல மூடநம்பிக்கைகளும் இனமேன்மை பாராட்டும் பழக்கமும் புகுந்திருந்தது. மதீனாவில் வாழும்போது அவர்கள் தங்களது இனவெறியை தக்க வைத்துக் கொண்டனர். முழுமையாக அரபியர்களுடன் ஒன்றிவிடவில்லை. தாங்கள் இஸ்ரவேலர்கள், யூதர்கள் என்ற உயர் இனம் என்று பெருமை பேசிக் கொண்டிருந்தனர். இதனால் அரபியர்களை மிகக் கேவலமாகக் கருதினர். அரபியர்களின் சொத்துகள் தங்களுக்கு ஆகுமானது என்றும், தாங்கள் நாடியபடி அவற்றை அனுபவித்துக் கொள்ளலாம் என்றும் கருதினர்.

### பொருளாதார ஆதிக்கம்

யூதர்கள் தங்களது மார்க்கத்தைப் பரப்ப வேண்டும் என்பதில் தீவிரம் காட்டவில்லை. மாறாக, ஜோசியம் பார்ப்பது, சூனியம் செய்வது, மந்திப்பது, பஞ்சாங்கம் பார்ப்பது போன்றவற்றையே தங்களது குலத்தொழிலாகவும் மதச் சடங்காகவும் செய்தனர். இந்தச் செயல்களின் மூலம் தாங்களே கல்விமான்கள், ஆன்மீகத் தலைவர்கள், சிறப்பிற்குரியவர்கள் என்று கருதினர்.

பொருளீட்டும் வழிகளில் மிகுந்த திறமை பெற்றவர்களாக இருந்தனர். இவர்கள் தானியங்கள், பேரீத்தங்கனி, மது வகைகள், துணிமணிகள் என அனைத்து வியாபாரங்களையும் தங்களது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். ஆடைகளையும், வித்துக்களையும், மது வகைகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, மதீனாவிலிருந்து பேரீத்தம் பழங்களை ஏற்றுமதி செய்தனர். மேலும் பல தொழில்களும், வியாபாரங்களும் அவர்கள் கைவசம் இருந்தன.

### வட்டி மூலம் ஆதிக்கம்

பொதுவாக அரபியர்கள் மூலம் பெரும் இலாபங்களை அடைந்தனர். வட்டி அவர்களின் குலத் தொழிலாக இருந்தது. கவிஞர்கள் தங்களைப் புகழ வேண்டும் என்பதற்காகவும், மக்களிடம் பெயர் பெற வேண்டும் என்பதற்காகவும் பெரும் கடன்களை வாரி வழங்கினர். இதற்குப் பகரமாக அரபுத் தலைவர்களின் தோட்டங்களையும், விவசாய நிலங்களையும் அடைமானமாக வைத்துக் கொண்டனர். பின்பு, அரபுத் தலைவர்களால் அந்தக் கடன்களை அடைக்க முடியாமல் போனபோது அவர்களே அந்தத் தோட்டங்களுக்கும், நிலங்களுக்கும் உரிமையாளர்களாகி விட்டனர்.

## சதியும் சூழ்ச்சியும்

யூதர்கள் சதித் திட்டம் தீட்டுவதிலும், அரபுகளின் ஒற்றுமையை குலைப்பதிலும், குழப்பங்களை உண்டு பண்ணுவதிலும் தீவிரம் காட்டினர். தங்களைச் சுற்றியுள்ள அரபு கோத்திரங்களுக் கிடையில் அவர்களால் புரிந்துகொள்ள முடியாத வகையில் சூழ்ச்சிகளைச் செய்து, சண்டைகளையும் போர்களையும் தூண்டி விட்டனர். இவர்களின் இந்தச் சதியால் அரபியர்களுக்கு மத்தியில் எப்போதும் போர் நடந்துகொண்டே இருந்தது. சில சமயம் போர் அணையும் நிலை ஏற்பட்டால் மீண்டும் புதிதாகப் போரின் நெருப்பை தூண்டுவதற்கு சூழ்ச்சி செய்வார்கள். போர் சூடுபிடித்துக் கொண்டால் ஓர் ஓரத்தில் உட்கார்ந்துக் கொண்டு அந்த அப்பாவி அரபியர்களுக்கு ஏற்படும் அழிவையும், நாசத்தையும் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். போருக்குத் தேவையான பொருளாதார வசதி குறைந்து அரபியர்கள் போரை நிறுத்திவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு பெரிய அளவில் கடன் கொடுப்பார்கள். இதுபோன்ற சூழ்ச்சிகளால் யூதர்கள் இரண்டு விதமான பயன்களை அடைந்தனர்.

1) யூதர்கள் தங்களின் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டனர்.

2) வட்டியைப் பரவலாக்கி தங்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தினர்.

## நபிகளார் வந்தபோது கோபம்

இவ்வாறு இருக்கும்போது மக்காவில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராக நியமிக்கப்படுகிறார்கள். மக்காவில் 13 வருடங்கள் கழித்ததன் பின்னால் நபியவர்கள் மதீனாவுக்கு குடிபெயர்கிறார்கள். இஸ்லாமிய பிரச்சாரத்தைத் தொடர்கிறார்கள். யூதர்கள் தவ்ராத் வேதத்தில் முன்னறிவிக்கப்பட்ட - தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த - இறைத்தூதர் முஹம்மது நபிதான் என்பதை ஐயமற அறிந்து கொண்டனர். “ஆனால் யாரை நாம் நம்மைவிட இழிவான இனம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோமே அந்த அரபுக் குலத்தில் அல்லவா அவர் பிறந்திருக்கிறார்! அவரை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? ஒருபோதும் முடியாது” என்று அப்பட்டமாக மறுத்து விட்டனர். இனவெறி அவர்களை இறைமார்க்கத்தை தடுத்தது. மட்டுமல்ல நபிகளாரையும் இஸ்லாத்தையும் மூர்க்கத்தனமாக எதிர்க்கத் தொடங்கினர்.

## ஆதிக்கத்தை இழக்கும் பயம்

இவர்களது இனவெறி இவர்களது அறிவையும், சிந்தனையையும் மழுங்கச் செய்தது. எனவே அரபியர்களில் இறைத்தூதர் அனுப்பப்பட்டதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், இஸ்லாமிய அழைப்புப்பணி இனவெறிகளுக்கும், அற்ப உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டதாகும். இஸ்லாமிய அழைப்புப்பணி என்பது ஒரு சீர்திருத்தமும், தூய்மையும், ஒழுக்கமும் நிறைந்த பணியாகும். இப்பணி பல இனத்தவர்களின் உள்ளங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. விரோதம் மற்றும் கோபத்தின் நெருப்பை அணைக்கிறது. எல்லா நிலைகளிலும், எல்லா செயல்களிலும் நம்பகத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் நேர்மையாக சம்பாதித்த தூய்மையானதையே உண்ண வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

எனவே யூதர்கள் சிந்திக்கத் தொடங்கினர்...

அரபியர்கள் இஸ்லாமை ஏற்றுக் கொண்டு இஸ்லாம் கூறும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டு விடும். தங்களது சதித்திட்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். தங்களது வியாபாரங்கள் நலிந்துவிடும். தங்களின் பொருளாதாரத்தின் மூலதனமாகிய வட்டித் தொழிலை இழந்து விடுவோம் என்று யோசித்தனர். மேலும், இந்த அரபியர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டால் வட்டியின் மூலம் அவர்களிடமிருந்து நாம் அபகரித்த சொத்துகளையும், தோட்டங்களையும், நிலங்களையும் மீட்டுக் கொள்வார்கள் என்று அஞ்சினர். எனவே முழுமூச்சாக இஸ்லாத்திற்கு எதிராகப் பாடுபட்டார்கள். இன்றும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு எதிராக உலெகங்கும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## இறைவனின் சவால்

இறைவனின் பெயரால் இனப்பெருமை பாராட்டி சக மனிதர்களின் உரிமைகளைப் பறித்து கொடுமைப்படுத்தியவர்கள் அல்லது தொடர்ந்து கொடுமைப்படுத்திக் கொண்டு வாழ்பவர்கள் இறைவனின் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. இறைவன் கற்பிக்காத இனமேன்மையை இறைவேதங்களில் புகுத்திய யூதர்களைத் தோலுரிக்கிறது திருக்குர்ஆன்.

அவர்கள் கூறுவது போல இறைவனுக்கு நெருங்கியவர்கள் அவர்கள்தான் மற்றவர்களை விட சொர்க்கத்திற்குத் தகுதியானவர்கள் என்பது அவர்களின் வாதமாக இருந்தால் ஏன் இந்த பூமியில் கஷ்டப்பட வேண்டும்? உடனே மரணத்தைக் கேட்டு ஏன் பிரார்த்திக்கக் கூடாது? என்ற கேள்வியை அவர்களிடம் கேட்கச் சொல்கிறான்.

- **அவர்களிடம் நீர் சொல்வீராக: இறைவனிடம் இருக்கும் மறுமை வீடு மற்ற மனிதர்களுக்கன்றி உங்களுக்கு மட்டுமே சொந்தமானதாய் இருக்குமானால், (உங்களின் இந்த நம்பிக்கையில்) நீங்கள் உண்மையானவர்களாய் இருந்தால், நீங்கள் மரணத்தை விரும்புங்கள் (பார்ப்போம்!)**
- **தம் கைகளினால் சம்பாதித்துள்ள தீவினைகளின் காரணத்தால், அவர்கள் அதனை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் (என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்). மேலும், இந்த அக்கிரமக்காரர்களை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.**
- **எல்லா மனிதர்களை விடவும் ஏன், இணைவைத்து வணங்குபவர்களை விடவும் இவர்களே வாழ்வின் மீது அதிகப் பேராசை கொண்டவர்களாய் இருப்பதை நீர் காண்பீர். அவர்களில் ஒவ்வொருவனும் (எப்படியாவது) ஓராயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். ஆயினும், அவனுடைய நீண்ட ஆயுள், வேதனையிலிருந்து அவனை விலக்கிவிடாதே! அவர்கள் எத்தகைய செயல்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இறைவன் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 2: 94-96)**

- **இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ”ஒருவனை அடித்து வீழ்த்துபவன் வீரனல்லன்” என்று கூறினார்கள். மக்கள், ”அப்படியானால், வீரன் என்பவன் யார், இறைவனின் தூதரே?” என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ”கோபத்தின்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே (வீரன் ஆவான்)” என்று கூறினார்கள். நூல்: முஸ்லிம்**

# சமத்துவத்துக்கு தடை நிற்கும் நாத்திகம்

ஒருபுறம் கடவுளின் பெயரால் சிலர் இனவெறி விதைத்துக்கொண்டிருக்க மறுபுறம் நாத்திகமும் தன் அறியாமைக் கொள்கைகளின் காரணமாக மனித சமத்துவத்தை மறுத்தது. பரிணாமவியல் என்ற அறியாமைக் கோட்பாட்டை போதித்து ஒரே ஒரு மனித ஆண்-பெண் ஜோடியில் இருந்துதான் மனித குலம் உருவாயிற்று என்ற உண்மையை மறுத்து குரங்கில் இருந்துதான் மனிதன் உருவானான் என்ற ஆதாரமற்ற ஊகத்தைப் பரப்பியது.

அதனால் ஒவ்வொரு இனத்துக்கும் மூதாதையர் குரங்குகள் வேறுவேறு என்ற காரணம் காட்டி மனிதனின் தோற்றம், நிறம், கலாச்சாரம் போன்றவற்றின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வழக்கமும் உருவானது. பல்லாயிரக்கணக்கான மக்களை காவுகொண்டது. உதாரணமாக ஹிட்லர் தன் நாஜி இனமே உலகில் மற்றெல்லாவற்றையும் விட உயர்ந்தது என்று கூறி மற்ற நாடுகளை அடிமைபடுத்தவும் மக்களைக் கொன்று குவிக்கவும் செய்தார். கருப்பர்கள் (நீக்ரோக்கள்) ஒருபோதும் வெள்ளை இனத்தாருக்கு சமமாக முடியாது என்று சொல்லி அவர்களை தாழ்த்தி வைக்கவும் செய்தார்.

## குற்றங்களுக்கு பொறுப்புணர்வு களைதல்

கொஞ்சநஞ்சம் மக்களிடம் இருந்து வந்த இறையச்சம் என்ற பொறுப்புணர்வை அறவே துடைத்தெறிந்தது நாத்திகம். யாருக்கு எந்தக் கொடுமைகள் செய்தாலும் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வை ஆதிக்க சக்திகளுக்குள் அது புகுத்தியது. ஆயுத ஆதிக்கம் வாய்த்த வெள்ளையர்கள் அவர்கள் பிடித்தெடுத்த கண்டங்களில் வாழ்ந்து கொண்டிருந்த பழங்குடியினரை ஈவிரக்கமின்றி கொன்று குவிப்பதற்கும் ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த கறுப்பின மக்களை ஆயுத முனையில் கீழடக்கி அமேரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்திச்சென்று அடிமை வாணிபம் செய்ததற்கும் நாத்திகக் கொள்கை உருவாக்கிய மனோநிலை பெரிதும் துணைபோயிருக்கிறது என்பதே உண்மை.

## பெரும்பான்மை எப்படி துணைபோயிற்று?

இன்னொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். கறுப்பின மக்கள் மீது நடந்த ஆதிக்கக் கொடுமைகளால் பயன்பெற்றவர்கள் சிறுபான்மையினரே. அவர்களுக்கு ஐரோப்பாவின் வெள்ளை இனப் பெரும்பான்மை மக்கள் துணை போனதால்தான் அவர்களால் இக்கொடுமையை நூற்றாண்டுகளாக நடத்த முடிந்திருக்கிறது. ஏன் யாரும் அவர்களைத் தட்டிக்கேட்க முன்வரவில்லை? அதற்கு நாத்திகம் கடவுளுமில்லை மறுமையும் இல்லை என்ற பிரச்சாரத்தின் மூலம் பெரும்பான்மை மக்களை மூளைசலவை செய்து வைத்திருந்தது.

## நாத்திக இயக்கங்களிடம் நடைமுறைத் தீர்வு இல்லை

இறைமறுப்பை அடிப்படையாகக்கொண்டு அமைந்த நாத்திக அமைப்புகளும் இயக்கங்களும் பெயரளவில் மனித நேயத்தையும் மனித

சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் பேசவும் பிரச்சாரம் செய்யவும்தான் முடியும். அவர்களால் இன்று நாட்டில் நிலவும் ஜாதிக் கொடுமைகளுக்கும் தீண்டாமைக் கொடுமைகளுக்கும் நடைமுறை சாத்தியமான தீர்வைக் காண முடியாது.

கீழ்கண்ட காரணங்கள் அவர்களின் குறைபாடுகளாகும்:

1. நாத்திகர்களிடம் ஒருங்கிணைந்த கொள்கை என்பது கிடையாது. காரணம் ஒவ்வொரு தனிமனிதனும் என்ன நினைக்கிறானோ அதுதான் நாத்திகத்தின் அடிப்படை.

2.தான்தோன்றித்தனம் ஒருபோதும் தனிநபர் நல்லொழுக்கத்திற்கான அடிப்படையோ சித்தாந்தமோ தரமுடியாது என்பது தெளிவு. மனிதன் ஏன் ஒழுக்கம் பேணவேண்டும் என்ற கேள்விக்கு பதில் கிடையாது.

3. இனம், மொழி, நிறம், இடம் ஆகியவற்றால் இயல்பாகவே பிரிந்து கிடக்கும் மக்களை இணைக்கும்படியான எந்த தத்துவமும் கிடையாது. எனவே ஜாதி ஒழிப்பு என்று சொல்லி தியரி பேசமுடியுமே தவிர நடைமுறைத் தீர்வுகள் நாத்திகவாதிகள் தரமுடியாது.

4. சரி எது தவறு எது நீதி எது அநீதி எது என்று வரையறுக்க ஒரு அளவுகோல் (criterion) கிடையாது. எனவே அனைவருக்கும் பொதுவான தீர்வுகளோ சட்டங்களோ நாத்திகம் தரமுடியாது.

சமூக பிரச்சினைகளுக்கு நடைமுறை சாத்தியமான தீர்வுகள் கிடையாது. உதாரணமாக பெண்சிசுக்கொலை, வரதட்சணை, சாதிக் கொடுமைகளை எந்த அளவுக்கு நடைமுறையில் தீர்த்து உள்ளார்கள் என்ற கேள்விகளுக்கு பதில் கிடைக்காது

## இறைவனின் எச்சரிக்கை

இறைவனின் பெயரால் இனவெறி கடைபிடித்த ஆத்திகர்களாயினும் சரி இறைமறுப்பை கைகொண்டு இனவெறி பாராட்டிய நாத்திகர்களாயினும் சரி அவர்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி இறுதித் தீர்ப்பு நாளன்று இறைவன் முன்னால் விசாரிக்கப்பட உள்ளார்கள் என்பது மட்டும் உறுதி. இறைவன் கற்பித்த மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மறுத்து சக மனிதனின் உரிமைகளை சூறையாடிய ஆத்திகர்களுக்கும் நாத்திகர்களுக்கும் கடுமையான தண்டனைகள் இறைவனிடம் காத்திருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

● **வரவிருக்கும் அந்நாளில் (ஏற்படக்கூடிய அவமானத்திலிருந்தும் தண்டனைகளிலிருந்தும்) நீங்கள் உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்! அன்று இறைவனின் பக்கம் நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். பிறகு ஒவ்வொருவருக்கும் அவரவர் சம்பாதித்தவற்றிற்கான (நன்மை அல்லது தீமைக்கான) கூலி முழுமையாகக் கொடுக்கப்படும். இன்னும் எவர் மீதும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. (திருக்குர்ஆன் 2:281)**

● "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் உரிமைகளை உரியவர்களிடம் நிச்சயமாக நீங்கள் ஒப்படைப்பீர்கள். எந்தளவுக்கென்றால், கொம்பில்லாத ஆட்டுக்காக (அதை முட்டிய) கொம்புள்ள ஆட்டிடம் பழிவாங்கப்படும்" (அறிவிப்பாளர் அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்).

# திருடர்கள் காத்திருக்கிறார்கள்!

அது ஒரு நள்ளிரவு நேரம்...

ஊரே அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறது...



நீங்களும் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்...

திடீரென உங்கள் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது...

திடுக்கிட்டு எழுகிறீர்கள்..

இன்னும் பலமாக கதவு தட்டப்படுகிறது...

பயந்து போய் "யாருப்பா அது?" என்று கேட்கிறீர்கள்..

"போலீஸ்!" கண்டிப்பான குரலில் பதில் வருகிறது..

மேலும் பயம் உங்களைக் கவ்விக்கொள்கிறது.

போலீஸ் எனும்போது கதவை திறக்காமல் இருக்க முடியுமா? விடுவார்களா?

கதவைத் திறந்தால்...

நான்கு போலீஸ்காரர்கள்... நடுவே ரவுடியின் கோலத்தில் ஒருவன்..கையில் துப்பாக்கி ஏந்தியபடி...

போலீஸ்காரர்களும் துப்பாக்கி வைத்திருந்தார்கள்.

நீங்கள் சுதாரிப்பதற்குள் போலீஸ்காரரே பேசினார்..

"அய்யா இவங்கதான் மிஸ்டர் ரங்கன்.. இந்த ஏரியால நீண்டகால திருடர். திருடர்கள் சங்க உறுப்பினர். இவங்களோட கோரிக்கைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பது பத்தி டிவியில் செய்தி கேட்டிருப்பீங்க. இவங்களோட தொழில தடங்கல் இல்லாம செய்ய அனைத்து ஒத்துழைப்பும் காவல்துறை குடுக்கனும்னு சொல்லி அரசு உத்தரவு. அதுதான் நாங்கெல்லாம் வந்திருக்கோம்"

உங்கள் தலைசுற்றல் அடங்குவதற்குள் ரங்கன் தன் அடையாள அட்டையை பாக்கெட்டில் இருந்து உருவி எடுத்துக் காட்டினார்..

"அண்ணே இதுதாங்க என்னோட ஐடி கார்டு. கவர்மென்ட் இஷ்ஷு பண்ணது.. பாருங்க கோபுரம் போட்ட சீல்!"

நீங்கள் வாயடைத்து நிற்கவே மிஸ்டர் ரங்கனே தொடர்ந்தார்...

"நீங்க டென்ஷன் ஆக வேண்டாம்ணே.. எல்லாம் நானே பாத்துக்கறேன்.. உங்க பீரோ சாவி, பெட்டிச் சாவி எல்லாம் எடுத்துக் குடுத்துட்டு நீங்க அந்த சோ∴பால ரிலாக்ஸ் பண்ணுங்க. பத்து நிமிஷத்திலே என் சோலிய முடிச்சுடறேன்.. எனக்கு வேணுங்கறத மட்டும்தான் எடுப்பேன்..அதுக்குள்ளாற உங்க மிஸ்ஸிஸ் போட்டிருக்கற நகையெல்லாம் கழட்டி இந்த சூட்கேஸ்ல போட்டுடுங்க"

போலீஸ் பரிவாரங்கள் வெளியே காவல் நிற்க அதிகார பூர்வமாக ஹாலுக்குள் நுழைந்தார் மிஸ்டர் ரங்கன்.

திடுக்கத்தில் நீங்கள் தயங்கி தயங்கி செய்வதறியாது நிற்கவே மிஸ்டர் ரங்கனின் துப்பாக்கி உங்களை நோக்கி நீள்கிறது...

"அண்ணே, சொன்ன பேச்ச கேளுங்கண்ணே!" சற்று அதட்டல் தொனியில் ரங்கன்.

--------------------

அரண்டுபோய் தூக்கத்தில் இருந்து எழுகிறீர்கள்.

கண்டது கனவுதான் என்று உணர்ந்ததும் பெருமூச்சு ஒன்று உங்களை அறியாமலேயே வெளிவருகிறது.

## சரி, இது நனவாக வாய்ப்புள்ளதா?

ஆம் வாய்ப்புள்ளது என்பதைத்தான் இன்றைய நாட்டு நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஒரு காலத்தில் பாவங்களாகக் கருதப்பட்டவை மக்களின் வெட்க உணர்வுகள் மக்கிப்போய்விட்ட நிலையில் இன்று அவ்வாறு கருதப்படுவதில்லை. வெட்கம், நாணம், நீதி, நியாயம் என்பவை வேகமாக தூரமாக விலகிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதைக் கண்கூடாகவே அறிகிறோம். மக்கள் தனிமனித நல்லொழுக்கத்தை அலட்சியம் செய்வதன் விளைவாகவும் தங்கள் மனம்போன போக்கில் தாங்களாகவே உண்டாக்கிக்கொண்ட சட்ட திட்டங்களின் விளைவாகவும் ஒவ்வொரு பெரும் பாவங்களும் சட்ட அங்கீகாரம் பெற்று வருவது கண்கூடு.

- ஓரினச்சேர்க்கை, விபச்சாரம், ஆபாசம், சூதாட்டம், மது, போதைப்பொருட்கள், என இவையெல்லாம் அதற்கு உதாரணங்கள். இந்த ஈன செயல்களைச் செய்பவர்கள் இன்று சங்கம் அமைக்கிறார்கள். தங்களுக்கு உரிமை கோரி அரசாங்கங்களுக்கு எதிராகப் போராடுகிறார்கள். வக்கீல்களை வைத்து வாதாடி சட்டங்களின் ஓட்டைகளுக்குள் நுழைந்து தங்களின் காரியங்களுக்கு சட்ட அங்கீகாரமும் அரசு அங்கீகாரமும் பெறுகிறார்கள்.

## வன்பாவங்களுக்கும் அங்கீகாரம் விரைவில்..

- இதே போக்கு தொடருமானால் நாளை கற்பழிப்பும், திருட்டும், கொலையும் இலஞ்சமும் கொள்ளையும் எல்லாம் சட்ட அங்கீகாரம் பெறுவதற்கான வாய்ப்பு பலமாகவே உள்ளது. பலமான வக்கீல்களை வைத்து வாதாடுவதன் மூலமும் நீதிபதிகளை விலைக்கு வாங்குவதன் மூலமும் இவை சாத்தியமே என்றே தோன்றுகிறது. அவர்களுக்கு தங்கள் தொழிலை தடையின்றி தொடர உரிமங்கள் (licence) வழங்கப்படுவதும் நடைமுறைக்கு வரலாம்.

- இன்று எவ்வாறு சினிமாக்களில் காட்டப்படும் ஆபாசமும் அந்நிய ஆண் பெண் தகாத உறவுகளும் கலை என்று போற்றப்படுகின்றனவோ அதேபோல கற்பழிப்பும் திருட்டும் கொலையும் எல்லாம் கலைகளாக மதிக்கப்பட்டு போற்றப்படும் நாட்கள் தொலைவில் இல்லை. இந்த வன்பாவங்களை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்வோர் நலனுக்காக அரசு நாளை புதுப்புது திட்டங்கள் தீட்டலாம்.

● ”அக்கலைகளைக்” கற்றுக்கொடுப்பதற்காக தொழில் நுட்பக் கல்லூரிகள் துவங்கப்படுவதும் பட்டங்கள் வழங்கப்படுவதும் அரசாங்க கவுரவம் கொடுக்கப்படுவதும் நடைமுறைக்கு வரலாம்.

● அரசாங்கம் மக்களிடம் இருந்து திரட்டும் வரிப்பணத்தில் இருந்து திரைக் கூத்தாடிகளுக்கு ... மன்னிக்கவும் திரைக் கலைஞர்களுக்கு... உயர்ந்த விருதுகள் வழங்குவதுதான் சகஜமாகி விட்டதே.

## ஆள்வோரின் பொறுப்பற்ற போக்கு

இன்று ஏற்கனவே அங்கீகாரம் பெற்றுள்ள ஓரினச்சேர்க்கை, விபச்சாரம், ஆபாசம், சூதாட்டம், மதுப் புழக்கம் போன்ற பாவங்கள் மனித சமூக அமைப்பின் அடிப்படையையே தகர்த்தெறிபவை. குடும்ப அமைப்பில் பல குழப்பங்களை உருவாக்கவும் சமூகத்தில் சீர்கேடுகள் பரவவும் தலைமுறைகளை பாதிக்கவும் செய்பவை இவை.

மக்கள் வெட்க உணர்வின்றி இப்பாவங்களில் மூழ்கி திளைக்கும்போது இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு நாட்டின் அரசாங்கங்களுக்கு உண்டு. மக்கள் நலனில் அக்கறை கொண்டவையாக இருந்தால் இப்பாவங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை கல்வி நிறுவனங்கள் மூலமும் ஊடகங்கள் மூலமும் மக்களுக்கு ஏற்படுத்த முடியும். ஆனால் இந்தப் பாவங்களைத் தடுப்பதற்காக பதிலாக அவற்றுக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கும் படுமோசமான நிலையை இன்று கண்டு வருகிறோம்.

## வாழ்வதற்கே வெறுத்த நிலை

தேசிய குற்றவியல் ஆவண காப்பகத்தின் (NCRB) அறிக்கை மிகவும் எச்சரிப்பதாக இருக்கிறது. அறிக்கைப் படி நாளொன்றுக்கு 371 பேர் இந்தியாவில் தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்தப் புள்ளிவிவரம் ஏறுமுகமாகவே உள்ளது. அதாவது மக்கள் உயிர் வாழ்வதற்கே வெறுத்த நிலை அடைந்துள்ளதையே இது காட்டுகிறது. நிலைமை திருத்தப்படாவிட்டால் இன்னும் பல விபரீதங்கள் நிகழவே செய்யும். மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் இதற்காக முன்வந்தால் சீர்திருத்தங்களை நிகழ்த்த வழிகள் பிறக்கும்.

## தடுப்பு நடவடிக்கை என்ன?

மேற்கண்ட விபரீதங்கள் நிகழாமல் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

● அதற்கு முதற்கண் தனிநபர் ஒழுக்கத்தை மக்களுக்கு முறையாகக் கற்றுக்கொடுத்து அதைப் பேணவேண்டியதன் அவசியத்தையும் பேணாவிட்டால் இம்மையில் ஏற்படும் விளைவுகளையும் மறுமையில் இறைவன் புறத்திலிருந்து கிடைக்கும் தண்டனைகளையும் பற்றி எச்சரிக்க வேண்டும்.

● அதேவேளையில் தனிநபர் ஒழுக்கத்தைப் பேணும்போது உலகில் ஏற்படும் ஒழுங்கையும் அமைதி நிறைந்த வாழ்வையும் பேணுவோருக்கு மறுமையில் பரிசாகக் கிடைக்கவுள்ள நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்க வாழ்வையும் பற்றி மக்களுக்கு போதிக்க வேண்டும்.

● இதைக் குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் கற்பிக்க வேண்டும். குழந்தைகளுக்கு பள்ளிகளில் இந்த நீதி

போதனையை கட்டாயப் பாடமாக்க வேண்டும்.

### சட்டங்களில் சீர்த்திருத்தம்

அடுத்ததாக குற்றங்கள் கட்டுக்கடங்காமல் வளர்வதை எவ்வாறு சட்டங்கள் மற்றும் நீதித்துறை மூலம் தடுப்பது?

குற்றவாளிகள் தாங்கள் செய்யும் பெரும் குற்றங்களையும் நியாயப்படுத்துவதும் குற்றவாளிகள் தண்டிக்கப் படுவதற்கு பதிலாக கவுரவிக்கப் படுவதும் ஆட்சிக் கட்டில்களில் அமர்த்தி வைக்கப்படுவதும் நாட்டில் நடப்பதற்குக் காரணம் நமது வலுவற்ற சட்டங்களே என்பதை அறியலாம். மனிதர்கள் தங்கள் சிற்றறிவு கொண்டு இயற்றிய சட்டங்களே இப்படிப்பட்ட விபரீதங்கள் நிகழக் காரணமாகின்றன.

### சரி மற்றும் தவறு அறியும் அளவுகோல்

நன்மை எது தீமை எது சரி எது தவறு எது நியாயம் எது அநியாயம் எது என்பதை மனிதன் தன்னிடம் உள்ள சிற்றறிவு கொண்டும் தன் ஆசாபாசங்களுக்கு உட்பட்டும் தீர்மானித்து அதன் அடிப்படையில் இயற்றப்படும் சட்டங்கள் குறைபாடுகள் உள்ளதாகவே இருக்கும். அதே வேளையில் இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் எவனோ அவன் மட்டுமே அனைத்து படைப்பினங்களையும் அவற்றின் சூட்சுமங்களையும் அவற்றுக்கு எது நல்லது எது தீயது என்பதை முழுமையாக அறிந்தவன். தன் படைப்பினங்களுக்கு எது எப்போது நல்லது அல்லது தீயது என்பதை அதி பக்குவமாக அறிந்தவனும் அவன் மட்டுமே. எனவே அவன் தரும் சட்ட திட்டங்கள் எவையோ அவை மட்டுமே குறைகள் இல்லாதது. மேலும் இவ்வுலகை மனிதர்களுக்கு ஒரு தற்காலிக பரீட்சைக்கூடமாக உருவாக்கிய இறைவன் நாளை இறுதித்தீர்ப்பு நாளின்போது அவன் வழங்கிய சட்டதிட்டங்களின் அடிப்படையிலேதான் நம்மை விசாரிக்கவும் செய்வான்.

### இதுதான் இஸ்லாம்

அந்த சர்வவல்லமை பொருந்திய இறைவன் இவ்வுலக மக்களுக்காக வழங்கிய வாழ்க்கைத் திட்டமே ‘இஸ்லாம்’ என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. அவன் வழங்கும் சட்டதிட்டங்களும் வழிகாட்டுதல்களும் அடங்கிய பெட்டகமே இறுதி வேதம் திருக்குர்ஆன். அந்த திருமறைக் குர்ஆனின் செயல்முறை விளக்கமே இறுதித் தூதர் முஹம்மது நபிகளாரின் வாழ்க்கை முன்மாதிரி! எனவே இறைவன் வழங்கிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை அழிவில் இருந்து காப்போமாக!

- **மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே இறைவன் அருள் செய்த(சட்ட திட்டத்)தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக. உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். (திருக்குர்ஆன் 5:48)**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.Registered News paper in India No. KARTAM/2007/28173

# இறைவன் இயற்றிய இயற்கை வழியில் பயணிப்போம் வாரீர்!



**’நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் மனைவிகளை உங்களிலிருந்தே அவன் உற்பத்தி செய்து, உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு இவைகளில் (ஒன்றல்ல) நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.’ (அல்குர்ஆன் : 30:21)**

## ஓரினச்சேர்க்கை ஒழித்திட உழைப்போம்!
## ஒழுக்கம் விதைப்போம்! குழப்பம் தவிர்ப்போம்!
## குடும்ப உறவை கண்ணெனக் காப்போம்!



வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. **PAYTM** மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் **QR CODE** ஐ **SCAN** செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து **9845373775** என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு **SMS** மூலம் தகவல் அனுப்பவும்.

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

To

**(PRINTED MATTER)**

..................................................................

..................................................................

..................................................................

..................................................................

# கடலும் கப்பலும் உங்கள் இறைவனை நினைவூட்டவில்லையா?



"இன்னும் அவர்களுக்கு ஓர் அத்தாட்சி, நாம் நிச்சயமாக அவர்களுடைய சந்ததிகளை நிறப்பப்பட்ட கப்பலில் ஏற்றிச் செல்வதில் உள்ளது. இன்னும், அவர்கள் ஏறிச் செல்வதற்காக அதைப் போன்ற (பல்வேறு கலங்களை) நாம் அவர்களுக்காகப் படைத்திருக்கின்றோம். அன்றியும் நாம் நாடினால் அவர்களை மூழ்கடித்து விடுவோம். அப்பொழுது அவர்களைக் காப்பாற்றுவோர் எவரும் இருக்க மாட்டார். மேலும், அவர்கள் விடுவிக்கப்படவும் மாட்டார்கள்." -(குர்ஆன் 36:41-43)

"அன்றியும், மலைகளைப் போல் உயரமாகச் செல்லும் கப்பல்கள் அவனுக்கே உரியன." -(குர்ஆன் 55:24)

சகோதரர்களே சிந்தியுங்கள்! எதை போட்டாலும் மூழ்கடிக்கும் தன்மை கொண்ட தண்ணீரில் மலைகளை போன்ற கப்பல்களை மூழ்கவிடாமல் தடுத்து வைப்பது யார்? அந்த கடலையும், கப்பலையும் படைத்த படைப்பாளன் ஓர் இறைவன் அல்லவா?

 ஜமாஅத்துல் ஜன்னா அறக்கட்டளை, செல் : 99419 38217, 9710120600